Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE & MANAGEMENT
## (EXTERNAL DEGREE PROGRAM)

PART-II EXAMINATION IN BBA – 1998/ 99 (PROPER/REPEAT (March 2005)

## BBA 306 MONETARY ECONOMICS

ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடை தருக. நேரம் : 03மணி

---

01. a. பணத்தின் கேள்வி தொடர்பாக "திரவப்பொறி" எனும் பதத்தை விளக்குக. (08 புள்ளிகள்)

b. ரோபினுடைய (Tobin) பணத்திற்கான கேள்விக் கோட்பாடானது எவ்வழிகளில் கெயின்சினுடைய கோட்பாட்டைவிட சிறப்பானது? (12புள்ளிகள்)

02. a. இலங்கையின் நாணயசட்ட விதியானது பணநிரம்பலை எவ்வாறு வரையறுக்கின்றது? (04புள்ளிகள்)

b. இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் ாணயக் கூட்டுக்களை (monetary aggregates)தருக. (08புள்ளிகள்)

c. இலங்கையின் பணநிரம்பலை தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக. (08புள்ளிகள்)

03. a. கேள்வித் தூண்டல் பணவீக்கத்தினையும் செலவுத்தூண்டல் பணவீக்கத்தினையும் வேறுபடுத்துக. (08புள்ளிகள்)

b. கூலி – விலைச் சுழற்சி (wage – price spiral) என்ற எண்ணக்கருவுடன் எவ்வாறு மேற்கூறிய கோட்பாடுகள் தொடர்புபடுகின்றன என்பதை விளக்குக. (12 புள்ளிகள்)

04. a. இலங்கை வங்கியானது அரச உதவி பெற்ற ஒரு வங்கியாக தாபிக்கப்படுவதை அவசியப்படுத்திய வங்கியியல் மற்றும் கடன் வழங்கல் தொடர்பான நிலைமைகளை விபரிக்குக. (12 புள்ளிகள்)

b. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடொன்றில் வணிகவங்கிகளின் பங்கு பணியினை(role)சுருக்கமாக விளக்குக. (08புள்ளிகள்)

05. a. ஒரு "கடன் கட்டுப்பாட்டாளராக" மத்திய வங்கி ஒன்றின் பணியினை விளக்குக. (08புள்ளிகள்)

b. இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய தொழிற்பாடுகளை சுருக்கமாகத் தருக.

(12புள்ளிகள்)

a. இலங்கையின் வங்கி சாராத ஏனைய நிதியியல் நிறுவனங்களை வரையறுப்பதுடன் அவற்றின் அண்மைக்கால அபிவிருத்திகளை விளக்குக.

(12புள்ளிகள்)

b. இலங்கையில் மேற்படி நிறுவனங்களின் பொருளாதார முக்கியத்துவத்தினை விளக்குக.

(08புள்ளிகள்)

a. "நாணயமாற்று வீதம்" என்ற பதத்திலிருந்து நீர் புரிந்து கொள்வது யாது?

(04புள்ளிகள்)

b. "நிலையான நாணயமாற்று வீதம்", "மிதக்கவிடப்பட்ட நாணயமாற்று வீதம்" ஆகிய இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுக.

(08 புள்ளிகள்)

c. இலங்கை ரூபாவுக்கு எதிராக அமெரிக்க டொலர் நாண த்தின் அண்மைக்கால பெறுமதியேற்றத்தின் பொருளாதார விளைவுகளை ஆராய்க . (08 புள்ளிகள்)

சுருக்கமாக விளக்குக.

a. பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளுக்கான ஒரு கருவியாகப் பணம்.

b. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு.

c. இலங்கையில் கிராமிய வங்கித் தொழிலின் அபிவிருத்தி.

(20 புள்ளிகள்)

**********************************